[பேரவைத் தலைவர்] [2021 பிப்ரவரி 26

அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய நிகழ்ச்சிநிரலில் குறிப்பிட்டுள்ள அவைமுன் வைக்கப்பெறும் ஏடுகளில் அ–வில் வரிசை எண் 48 முதல் 56 வரையுள்ள 9 அறிவிக்கைகள் மற்றும் வரிசை எண் 57 முதல் 79 வரையுள்ள 23 ஆண்டறிக்கைகள், தணிக்கை அறிக்கைகள் ஆகியவற்றின் மென்பொருள் வடிவம் PDF முறையில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், 148 உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் கொண்ட முதலாவது மற்றும் இரண்டாவது பட்டியல் மற்றும் 377 உடுக்குறியிட்ட வினாக்களுக்கான விடைகள் பேரவை விதி 51–ன்கீழ் உடுக்குறியிடாதவைகளாக மாற்றம் செய்யப்பட்ட 3–வது மற்றும் 4–வது பட்டியல் ஆகியவற்றின் வினாக்களின் எண்கள் மற்றும் உறுப்பினர் பெயர் ஆகிய விவரங்களை மட்டும் உள்ளடக்கிய அட்டவணை பட்டியலாக தயார் செய்யப்பட்டு அவற்றின் மென்பொருள் வடிவம் PDF முறையில் அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் மற்றும் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றம் செய்யப்பட்ட வினாக்கள்–விடைகள் ஆகியவற்றின் நகல்கள் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு மட்டுமே அனுப்பி வைக்கப்படும். குறிப்பிட்ட வினாக்கள்–விடைகள் பட்டியலின் தலா இரண்டு பிரதிகளும், குழுக்களின் அறிக்கைகள், பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிக்கைகள், ஆண்டறிக்கைகள், தணிக்கை அறிக்கை மற்றும் ஏனைய தாள்கள் ஆகியவற்றின் 5 பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக கலைவாணர் அரங்கத்தின் முதல் தளத்தில் உள்ள சட்டமுன்வடிவு–1 பிரிவில் வைக்கப்பட்டுள்ளன என்பதனையும் பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–50

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.

*2021 பிப்ரவரி 26]*

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை சமர்ப்பிக்க எனக்கு வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மற்றும் இந்த அவையில் உள்ளவர்களுக்கும் என்னுடைய பணிவு சார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளுடைய நிலையை அறிந்து, சட்டமன்றப் பேரவையில் விதி 110—ன்கீழ், ஏற்கெனவே விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற பயிர்க் கடன் 12,110 கோடி ரூபாய் அளவிற்கு மிகப் பெரிய தொகையை தள்ளுபடி செய்து, இன்றைக்கு இதே சட்டமன்றப் பேரவையில் விதி 110—ன்கீழ், விவசாயிகள் வங்கிகளில் மட்டுமல்ல, தமிழகத்தில் கூட்டுறவு நிறுவனங்களில் 6 பவுன் வரை அடகு வைத்து பெற்ற நகைக் கடனை தள்ளுபடி செய்து, தமிழக மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியிருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் கொரோனா காலத்தில் பெற்ற கடன்களைக் கட்டுவதற்கு சிரமப்பட்டுக் கொண்டிருந்தனர். அந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெற்ற கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்வதாக விதி 110—ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிற இந்த அறிவிப்புமூலம், தமிழ்நாட்டு மக்களுடைய ஒட்டுமொத்த ஆதரவையும் பெற்று, அடுத்த சட்டமன்றத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சராக, இந்தச் சபைக்கு வர வேண்டுமென்று, ஒட்டுமொத்த தமிழக மக்களின் சார்பாக மட்டுமல்லாமல், இந்த அவையின் சார்பாகவும் கேட்டுக்கொண்டு, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் என்கிற முறையில் என்னுடைய பணிவு சார்ந்த வணக்கத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018—2021 ஆம் ஆண்டிற்கான

மதிப்பீட்டுக் குழுவின் 22 மற்றும் 23 ஆகிய இரண்டு அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளித்து, அமர்கிறேன்.

## (ஆ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ், பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர் அவர்கள்.

**திரு. ஆர். நடராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15–வது சட்டமன்றப் பேரவையின் கடைசிக் கூட்டத் தொடரில் எனக்கு பேச வாய்ப்பு கிடைத்ததில் மகிழ்ச்சியடைகிறேன்.

சட்டமன்றப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுவில் தொடர்ந்து ஐந்து வருடங்கள் பணியாற்ற வாய்ப்பளித்த, ‘நூற்றுக்கு நூறு’ வெற்றி வாகை சூடிக் கொண்டிருக்கின்ற விதி–110–ன் நாயகன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தங்களுக்கும் எனது இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிருவாகம், ஆளுமை, சட்டம்–ஒழுங்கு, தொழில், முதலீடு ஈர்த்தல் எல்லாவற்றிலும், மாண்புமிகு திரு. எடப்பாடியார் அவர்களின் தலைமையில் இயங்கும் அம்மாவின் அரசின் சிறந்த செயல்பாட்டால், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது. அதே வகையில், சட்டமன்றப் பேரவையை ஜனநாயக பண்போடு, எல்லோரும் பாராட்டும் வகையில், வள்ளுவப் பெருந்தகை வகுத்துத் தந்த குறளுக்கேற்ப,

‘தகுதி எனஒன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்’

நடுநிலை என்ற அறம் காத்து, நிருவகிக்கும் பொறுப்பில் பேரவைத் தலைவர் அவர்கள் உள்ளதால், தமிழக சட்டமன்றப் பேரவை இந்தியாவிலேயே முன்னோடியாக விளங்குகின்றது என்ற பெருமையைக் கொண்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மிகச் சிறப்பாகச் செயல்பட்ட மாண்புமிகு அமைச்சர்களுக்கும், ‘கடமை, கண்ணியம், கட்டுப்பாடு’ என்ற கோட்பாடுகளுடன்,